1974 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திண்டுக்கல் வழியாக 11 விரைவு பேருந்துகள் ஏற்கனவே சென்று வருகின்றன. திண்டுக்கல்லில் இறங்கி கம்பம் போவதற்கு நிறைய பேருந்து வசதி இருக்கிறது. ஆகவே தற்பொழுது விரைவுப் பேருந்து நேரடியாக விடும் உத்தேசம் எதுவுமில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : பேரூர்களை இணைப்பதற்கு சென்னை நகரிலிருந்து நெடுந்தூர பஸ்களை விடுவது எந்த அடிப்படையில்? வழித் தடங்கள் பொறுக்கப்படுவது வசூலை முன்னிலையாக வைத்துப் பொறுக்கப் படுகிறதா? அல்லது மக்களுடைய வசதிகளை முன்னிலையாக வைத்துப் பொறுக்கப்படுகிறதா? அப்படியானால் இதுவரையில் விண்ணப்பம் செய்யப் பட்டுள்ள நெடுந்தூர தடங்கள் பற்றி அரசு எடுத்துள்ள முடிவு என்ன என்பதை நான் அறியலாமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனிக் கேள்வி போட்டால் விவரம் தர ஏதுவாக இருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்னை-கம்பம் துரித பஸ் ஏற்பாடு இருக்கிறதே, ஏற்கனவே சென்னையிலிருந்து பழனிக்கு இம்மாதிரி துரித பஸ் போகிறது. கம்பத்திற்குச் செல்வதற்கு இடையிலே இருக்கக்கூடிய தேனி போன்ற இடங்களுக்கு லாபகரமாகப் போகும் என்பது மாத்திரமல்ல, அந்தப் பகுதியிலிருப்பவர்கள் மதுரைக்கு வந்து பஸ்களில் ஏறிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும். இது சம்பந்தமாக அரசு மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்பொழுது அத்தகைய உத்தேசம் இல்லை.

திரு. பெ. சீனிவாசன் : இந்தக் கம்பம் பள்ளத்தாக்கு ஏரியாவில் நிறைய ஊர்கள் இருக்கின்றன. பெரிய முனிசிபல் டவுன்கள் ஏராளமாக இருக்கின்றன. சென்னையிலிருந்து பஸ் விட முடியாவிட்டாலும், திண்டுக்கல்லிலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ், மதுரையிலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ், ராஜபாளையத்திலிருந்து எக்ஸ்பிரஸ் பஸ் இப்படி அடிக்கடி எக்ஸ்பிரஸ் பஸ் விடுகிற நிலைமையில் குறுகிய தூர எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடுவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் வேண்டிய ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது அரசு போக்குவரத்துத் துறை இலாகா சம்பந்தமான கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்படும்.

[1974 ஏப்ரல் 15

தேனி-சுப்புலாபுரம் பேருந்துப்பணி

*835 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், தேனியில் இருந்து சுப்புலாபுரத்திற்கு தனியாரால் நடத்தப்படும் நகர பஸ் சரிவர இயக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) உரிய நேரத்தில் இப்பேருந்தினை ஓட்டிச் செல்வதில்லை என்ற குற்றச்சாட்டு குறித்து மறைமுக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த வழித்தடத்தில் இப்பேருந்து உரிய நேரத்தில் தற்பொழுது ஓட்டப்படுகின்றது என்று அந்த விசாரணையிலிருந்து தெரியவருகிறது.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. பெ. சீனிவாசன்: சுப்புலாபுரம், தேனி, வடமலைக்குண்டு ஆகிய பகுதிகளில் ஒரே தனியார் ஆபரேட்டர், பிரைவேட் ஆபரேட்டர் இருக்கிறார் என்று நினைக்கிறேன். இங்கே பி.ஆர்.ஸி. பஸ்களை விடுவதற்கு, குறைந்தது தேனி, வடமலைக்குண்டு பகுதிக்கு பி.ஆர்.ஸி. பஸ்கள் விடுவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது இந்தக் கேள்வியிலிருந்து எழவில்லை.

திரு. எம். தேவராசன்: நெடுந்தூர பஸ்களை விடுவது பற்றி சமீபத்தில் மத்திய அரசு ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறதே, அது பற்றி நமது அரசின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த விவரத்தைப் பத்திரிகையிலே பார்த்தேன். அரசுத் தரப்பில் எந்தவிதமான தகவலும் இன்னும் கிடைக்கவில்லை.

Tiruppapuliyur Pataleeswarar Devasthanam

*850 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether the gold Kalasams of the Tiruppapuliyur Pataleeswarar Devathanam have been missing around January 1974; and

(*b*) if so, the details thereof?